**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 58/2024**

**PW. 1**

**Date: 23.03.2026**

| பெயர் | திரு.புஷ்பராஜ் | வயது | 34 |
|---|---|---|---|
| கணவர்/தந்தை பெயர் | சைமன் | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **23rd March 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

5. நான் பொறியியல் படித்துள்ளேன். எனக்கு தமிழ் ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். நானும் எதிரியும் சென்சிபெல் சாப்ட்வர் சொலிசன்ஸ் என்ற நிறுவனத்தில் ஒன்றாக வேலை செய்தோம். நான் என்ன பதவியில் இருந்தேன் என்றால் டெவலப்பராக இருந்தேன். அவரும் டெவலப்பராகத்தான் இருந்தார். ஆனால் எனக்கு பணியில் மேல் பதவியில் இருந்தார். நான் எதிரிக்கு கொடுத்த பணம் நான்கு வங்கியில் இருந்து கடன் வாங்கி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 23/07/2019 அன்று மூன்று வங்கியில் இருந்து கடன் பெற்றுக் கொடுத்தேன். 16/08/2019 அன்று ஒரு

வங்கியில் இருந்து கடன் பெற்றுக் கொடுத்தேன். மொத்தமாக எவ்வளவு கடன் பெற்றேன் என்றால் பிடித்தம் போக முப்பத்தி ஐந்து லட்சம் என்னுடைய வங்கி கணக்கிற்கு வந்தது.

6. அந்த நான்கு வங்கி கடன் குறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக வங்கியில் கடன் பெற்றால் எத்தனை ஆண்டுகளுக்கு மாதம்தோறும் எவ்வளவு தவணை செலுத்த வேண்டும் என்ற விவரப்பட்டியல் கொடுக்கப்படும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த புகாரில் மாதந்தோறும் எவ்வளவு தவணை செலுத்த வேண்டும் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி அந்த தவணைத் தொகையை 2022 ஆம் ஆண்டு மே மாதம் வரை முறையாக செலுத்தி வந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு எதிரியின் மனைவியின் வங்கி கணக்கில் இருந்து தவணைத் தொகை வந்ததா என்றால் இரண்டு மாதங்களுக்கு வந்தது. நான் ஆணையர் அலுவலகத்தில் எதிரியின் மீது புகார் கொடுத்ததை தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் எதிரி ரூ.13.5 லட்சத்தை மாதம் தோறும் ரூ.50,000/ செலுத்துவதாக எழுதிக் கொடுத்து விட்டு சென்றார். அதன்படி தான் அவரது மனைவியின் வங்கிக் கணக்கில் இருந்து இரண்டு மாதங்களுக்கு மட்டும் அந்த பணத்தை அனுப்பி வைத்தார்.

7. இந்த வழக்கில் எதிரி எனக்கு ரூ.21,07,000/- கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரி எனக்கு கொடுத்த தொகை போகத்தான்

மீத பணத்தை நான் குறிப்பிட்டுள்ளேன். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எதிரி எனக்கு கொடுப்பதாக சொல்லப்பட்ட தொகை ரூ.13,50,000/– என்றால் சரிதான். பொதுவாக கடன் தவணை காலத்தை பொறுத்து தவணைத் தொகையும் மாறும் என்றால் சரிதான். 2020 – 2021 காலம் கொரனா நோய் தொற்று காலம் என்றால் சரிதான். அந்த காலத்திலும் எதிரி தவணைத் தொகையை முறையாக செலுத்தி வந்தார் என்றால் சரிதான். நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணம் நாங்கள் இருவரும் ஒன்றாக வேலை செய்தபோது கொடுத்தேனா அல்லது அவர் வேலையை விட்டு நின்ற பிறகு கொடுத்தேனா என்றால் வேலையை விட்டு நின்ற பிறகு தான் கொடுத்தேன்.

8. எதிரி என்னிடம் என்ன குடும்ப தேவைக்காக கடன் பெற்றார் என்ற விவரத்தை என்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரி வேலையை விட்டு நின்று விட்டதால் புதிதாக தொழில் செய்வதற்காக என்னிடம் வங்கியில் இருந்து கடன் பெற்று தரும்படி கேட்டார். நான் அந்த விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் முதல் விசாரணையிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 25/02/2023 அன்று காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம்

காட்டப்படும் ம.சா.ஆ.5 ல் எதிரி எனக்கு எவ்வளவு பணம் தர வேண்டும் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. என்னுடைய தம்பியின் பெயர் பிரசாந்த் மாதவன் என்றால் என்னுடைய பெரியப்பா மகன். அவருடைய வங்கிக் கணக்கிற்கு எதிரியின் வங்கி கணக்கில் இருந்து ரூ.3,00,000/- பரிவர்த்தனை செய்யப்பட்டது என்றால் நினைவில்லை. என்னுடைய வங்கி கணக்கு தி.நகர் எச்.டி.எப்.சி வங்கியில் உள்ளது. அதன் எண். 50100027445521. எதிரியின் வங்கிக் கணக்கும் எச்.டி.எப்.சி வங்கியில்தான் உள்ளது என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கை குறிப்பிட்டுதான் ம.சா.ஆ.2 ஐ தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரியின் வங்கி கணக்கு எண்.03901140040450 என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்த போது கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் எதிரி தன்னுடைய குடும்ப தேவைக்காகவும் தனது அம்மாவின் மருத்துவ செலவிற்காகவும் என்னிடம் கடன் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

10. தற்போது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 ல் எதிரி ஒரு வணிக நிறுவனம் தொடங்கப் போவதாகவும் அதற்காக என்னிடம் கடன் கேட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.6 ல் குடும்ப சூழ்நிலை காரணமாக எதிரி என்னிடம் கடன் கேட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.8 ன் படி நான் கொடுத்த

புகாரை போலீசார் முடித்து வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**வேண்டுக்கோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்க்ப்படுகிறது.**

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**District Munsif cum Judicial Magistrate,**
**Thiruporur.**